# March 24, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் கிரீன்லாந்து இணைப்பு குறித்த சர்ச்சைகளுக்கு மத்தியில், ஐரோப்பிய நாடான டென்மார்க் நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் செவ்வாய்க்கிழமை (மார்ச் 24) நடைபெறுகிறது.

(i) டிரம்ப்பின் தலையீடு சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்தாலும், விலைவாசி உயர்வு, செல்வந்தர்களுக்கான சொத்து வரி, குடியேற்றக் கொள்கைகள் போன்ற உள்நாட்டுப் பிரச்னைகளே இத்தேர்தலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆளும் சமூக ஜனநாயகக் கட்சி பின்னடைவைச் சந்திக்கும் என கணிக்கப்பட்டாலும், கடந்த 2019 முதல் பிரதமராக உள்ள மெட்டே ஃபிரடெரிக்சன் மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்கவே அதிக வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிகிறது.

(ii) 179 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு 90 இடங்கள் தேவை. இழுபறி நீடித்தால், கிரீன்லாந்து மற்றும் ஃபரோயே தீவுகளின் 4 இடங்களே அடுத்த அரசைத் தீர்மானிக்கும்.

2. ஐரோப்பிய நாடான ஸ்லோவேனியாவில்

நடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், அங்கு புதிய ஆட்சியமைப்பதில் இழுபறி நீடிக்கிறது. "பிரதமர் ராபர்ட் கோலோப் தலைமையிலான சுதந்திர இயக்கம் 29 இடங்களிலும், முன்னாள் பிரதமர் ஜானெஸ் ஜான்சாவின் ஸ்லோவேனிய ஜனநாயகக் கட்சி 28 இடங்களிலும் வென்றன.

(i) 90 இடங்களைக் கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்தில் ஆட்சியமைக்க 46 இடங்கள் தேவை என்ற நிலையில், சிறிய கட்சிகளின் ஆதரவைப் பெற இருதரப்பும் தீவிரமாக களமிறங்கியுள்ளன.

(ii) தற்போதைய நிலவரப்படி, ராபர்ட் கோலோப் ஆதரவு அணிக்கு 40 இடங்களும், ஜானெஸ் ஜான்சா ஆதரவு அணிக்கு 43 இடங்களும் கிடைத்துள்ளன.

3. தென்கிழக்காசிய நாடான வியத்நாமில் கடந்த 15-ஆம் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி அமோக வெற்றி பெற்றது.

(i) இத்தேர்தலில் 99 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகி சாதனை படைத்த நிலையில், அதிகாரபூர்வ முடிவுகளில் நாடாளுமன்றத்தின் மொத்தமுள்ள 500 இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சி 482 இடங்களை (96 சதவீதம்) வென்றது. மீதமுள்ள 18 இடங்களில் மட்டுமே கட்சி சாராத சுயேச்சைகள் மற்றும் பிற வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

(ii) வியத்நாம் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள தகவலின்படி, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் டோ லாம் ஹனோய் தொகுதியில் போட்டியிட்டு, பெரும் வாக்கு வித்தியாசத்தில் வென்றார்.

(iii) வரும் ஏப். 6-ஆம் தேதி புதிய நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் கூடி, நாட்டின் புதிய அதிபர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட முக்கியப் பதவிகளுக்கு முறைப்படி ஒப்புதல் அளிக்கப்படும்.

4. ரூபாயின் மதிப்பு முதல்முறையாக டாலர் ஒன்றுக்கு ரூ.94 என்ற எல்லையைக் கடந்து, ரூ.94.11 எனும் புதிய வரலாறு காணாத குறைந்தபட்ச அளவை எட்டியது. பின்னர், மீண்டும் ரூ.93.25 எனும் அளவுக்குத் திரும்பியது. வலுவடைந்து வரும் அமெரிக்க டாலர், உள்நாட்டுப் பங்குச் சந்தைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகிய வற்றால் இந்திய ரூபாய் மதிப்பு பலவீனமாக இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்தனர்.

5. விளையாட்டுக் களத்தில் இயங்கி வந்த மூத்த பத்திரிகையாளரான எஸ்.தியாகராஜன் (85) வயது மூப்பு காரணமான உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார். இந்திய மற்றும் தமிழ்நாடு விளையாட்டுச் செய்தியாளர்களுக்கான சங்கத்தின் தலைவராக அவர் பொறுப்பு வகித்துள்ளார்.

6. இந்தியாவில் முதல் முறையாக தேசிய உள்ளரங்கு தடகள சாம்பியன்ஷிப், ஒடிஸா மாநிலம் புவனேசுவரத்தில் செவ்வாய்க்கிழமை (மார்ச் 24) தொடங்கி 2 நாள்கள் நடைபெறுகிறது.

(i) இந்தப் போட்டியில் சுமார் 300 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். ஒடிஸா, உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் இருந்து அதிகபட்சமாக தலா 30 பேர் வரை கலந்துகொள்கின்றனர். ஆடவர், மகளிர் என இருபாலருக்குமே தலா 11 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

(ii) இதில் ஓட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல், கம்பு ஊன்றித் தாண்டுதல், உயரம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், குண்டு எறிதல் உள்ளிட்டவையும் அடங்கும். தங்களது விளையாட்டில் தேசிய சாதனை யாளர்களாக இருக்கும் அனிமேஷ் குஜூர் (ஓட்டப் பந்தயம்), முகமது அஃப்சல் (ஓட்டப் பந்தயம்), பிரவீண் சித்ரவேல் (மும்முறை தாண்டு தல்) ஆகியோர் இதில் பங்கேற்கின்றனர்.

(iii) நடப்பாண்டில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்குத் தயாராகும் வகையில் இந்தப் போட்டி உதவியாக இருக்கும் என நட்சத்திரப் போட்டியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(iv) 2028 மார்ச் மாதத்தில் இதே இடத்தில் உலக உள்ளரங்கு தடகள சாம்பியன்ஷிப்பை நடத்தும் வாய்ப்பை இந்தியா முதல்முறையாக பெற்றிருப்பதால், அதற்கான தயார்நிலையை சோதிக்கும் முயற்சியாக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

(v) இந்திய வீரர், வீராங்கனைகள் சிலர் சர்வதேச அளவிலான உள்ளரங்கு தடகள போட்டிகளில் பங்கேற்றாலும், இந்தியாவில் இந்தப் போட்டி அவ்வளவு பிரபலமாக இல்லை. இதற்கு, அந்தப் போட்டிக்கு உகந்த தரத்திலான வசதிகள் நாட்டில் இல்லாததே பிரதான காரணமாக இருக்கிறது.

(vi) உள்ளரங்கு போட்டியானது காற்றின் வேகம் மற்றும் வானிலை ஆகியவற்றால் பாதிக்கப்படாத வகையில் நடைபெறும். ஈட்டி எறிதல், ஸ்டீபிள் சேஸ் போன்ற பிரிவுகள் இல்லாததால், நட்சத்திர வீரர்களான நீரஜ் சோப்ரா, அவினாஷ் சேபிள் போன்றோர் இதில் களம் காணவில்லை.

7. இந்தியாவிடம் கச்சா எண்ணெய் கையிருப்பு எவ்வளவு உள்ளது என்பது குறித்து மத்திய அரசு பதில் அளித்துள்ளது.

(i) இஸ்ரேல், அமெரிக்க தாக்குதலுக்குப் பதிலடியாக கச்சா எண்ணெய் கப்பல்கள் அதிகம் செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது. இதனால் பல நாடுகளில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்ந்துவிட்டது. இந்தியா தனது கச்சா எண்ணெய், எரிவாயு ஆகியவற்றை வளைகுடா நாடுகளில் இருந்து ஹோர்முஸ் நீரிணை வழியேதான் இறக்குமதி செய்கிறது. இதனால் ஈரான் மற்றும் இஸ்ரேல், அமெரிக்கா இடையேயான போரால் இந்தியாவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

(ii) இந்நிலையில், மாநிலங்களவையில் இந்தியாவிடம் கச்சா எண்ணெய் கையிருப்பு எவ்வளவு உள்ளது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி எழுத்துபூர்வமாக பதில் தாக்கல் செய்தார். அதில் அவர் தெரிவித்தி ருப்பதாவது:

- ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம், கர்நாடக மாநிலம் மங்களூரு, படூர் ஆகிய இடங்களில் கச்சா எண்ணெய்யை அவசர காலத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காக சேமித்து வைக்கும் வசதி உள்ளது. அங்கு 53 லட்சம் டன் அளவுக்கு கச்சா எண்ணெய்யை சேமித்து வைக்க முடியும். அதை கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டாலோ அல்லது விலைவாசி உச்சம் தொட்டாலோ அந்நேரத்தில் 9.5 நாள்களுக்கு பயன்படுத்த முடியும். தற்போது அங்கு மூன்றில் இரண்டு மடங்கு கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது.
- கச்சா எண்ணெய் இருப்பைக் கையாளும் ஐஎஸ்பிஆர்எல் நிறுவனத்திடம் தற்போது 30 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. இது மொத்த அளவில் 64 சதவீதம் ஆகும்.
- கடந்த 2021-ஆம் ஆண்டு இந்தியாவில் மேலும் கச்சா எண்ணெய் சேமிப்பு வசதிகளை, ஒடிஸா மாநிலம் சன்டிகோல், கர்நாடக மாநிலம் படூரில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது. இதில் சன்டிகோலில் 40 லட்சம் டன் கச்சா எண்ணெய்யும், படூரில் 20 லட்சம் டன் கச்சா எண்ணெய்யையும் சேமிக் கலாம். அதாவது ஏற்கெனவே 53 லட்சம் டன் கச்சா எண்ணெய் சேமிப்பு வசதி இருக்கும் நிலையில், புதிதாக ஏற்படுத்தப்படும் கச்சா எண்ணெய் சேமிப்பு வசதி மூலம் கூடுதலாக 60 லட்சம் டன் கச்சா எண்ணெய்யை சேமிக்கலாம். இதில் படூரில்

கட்டுமானப் பணிக்கு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது.

- தற்போது நமது நாடு, பொதுத் துறை நிறுவனங்கள் மூலம் 41 நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்கிறது. அவற்றில் வழக்கமாக கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளான இராக், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், குவைத், கத்தார் நாடுகளும், புதிய விநியோகஸ்தர் நாடுகளான அமெரிக்கா, நைஜீரியா, அங்கோலா, கனடா, கொலம்பியா, பிரேஸில், மெக்சிகோ ஆகியவையும் அடங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

8. எண்ணற்ற இந்தியர்களுக்கு சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங் உத்வேகமாகத் திகழ்வதாக பிரதமர் நரேந்திர மோடி புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

(i) கடந்த 1931-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் தேதி ஆங்கிலேய ஆட்சியாளர்களால் சுதந்திரப் போராட்ட வீரர்கள் பகத் சிங், அவரின் நண்பர்கள் சிவராம் ராஜ்குரு சுக்தேவ் தாபர் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். அவர்களின் நினைவு தினம் திங்கள்கிழமை (மார்ச் 23) அனுசரிக்கப்பட்டது.

(ii) மறைந்த சோஷலிஸ்ட் தலைவர் ராம் மனோகர் லோஹியாவின் பிறந்த தினம் திங்கள்கிழமை (மார்ச் 23) கொண்டாடப்பட்டது.

9. ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து 92,000 டன் எல்பிஜியுடன் (திரவபெட்ரோலிய எரிவாயு) மேலும் இரு கப்பல்கள் இந்தியா நோக்கி புறப்பட்டன.

(i) மத்திய 'பைன் கேஸ்' மற்றும் ‘ஜக் வசந்த்’ ஆகிய இரு கப்பல்களும் ஓரிரு நாளில் இந்தியா வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதாக கப்பல் போக்குவரத்து அமைச்சக சிறப்புச் செயலர் ராஜேஷ் குமார் தெரிவித்தார்.

(ii) மேற்காசிய போர் காரணமாக ஈரான் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியை ஈரான் முடக்கியதால், 28 இந்திய சரக்கு கப்பல்கள் உள்பட பல நாட்டு சரக்குக் கப்பல்கள் அந்த வழித்தடத்தில் மேற்கொண்டு பயணிக்க முடியாமல் சிக்கின. இவற்றில் 24 கப்பல்கள் அந்த நீரிணையின் மேற்குப் பகுதியிலும்,4 கப்பல்கள் கிழக்குப் பகுதியிலும் சிக்கியிருந்தன. அதைத் தொடர்ந்து, ஈரானுடன் இந்தியா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியது.

(iii) அதன் பலனாக, 92,712 டன்னுடன் ‘ஷிவாலிக்' மற்றும் ‘நந்தாதேவி' ஆகிய இரு கப்பல்கள் முறையே மார்ச் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் குஜராத்தை வந்தடைந்தன. 'ஜக் லாட்கி' என்ற கப்பல் 80,800 டன் கச்சா எண்ணெய்யுடன் குஜராத்தின் முந்த்ரா துறைமுகத்தை கடந்த மார்ச் 18-ஆம் தேதி வந்தடைந்தது. ஓமனில் இருந்து ஆப்பிரிக்காவுக்கு பெட்ரோல் கொண்டுசெல்லும் 'ஜக் பிரகாஷ்' என்ற கப்பல் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து தான்சானியாவை நோக்கிப் பயணித்து வருகிறது.

(iv) இதன்மூலம் மேற்கு மற்றும் கிழக்கு என இரண்டு பகுதிகளிலும் தலா 2 கப்பல்கள் என மொத்தம் 4 கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து பாதுகாப்பாக பயணத்தை மேற்கொண்டன. இதை தொடர்ந்து, ஹோர்முஸ் நீரிணையின் மேற்கு பகுதியில் 22 கப்பல்களும், கிழக்குப் பகுதியில் 2 கப்பல்களும் நின்றன.

(v) இந்நிலையில், மேற்கு பகுதியில் இருந்து 92,000 டன் எல்பிஜியுடன் ‘பைன் கேஸ்' மற்றும் ‘ஜக் வசந்த்’ ஆகிய இரு கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து ஓரிரு நாளில் இந்தியா வந்தடையும் என ராஜேஷ் குமார் தெரிவித்தார்.

(vi) மேலும், ஹோர்முஸ் நீரிணையில் உள்ள இந்தியக் கப்பல்களில் சிக்கியிருந்த 611 மாலுமிகளில் 11 பேர் இந்தியா வந்தடைந்ததாகவும் அவர் தெரிவித்தார். ஒட்டுமொத்தமாக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 500 சரக்குக் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையில் சிக்கியுள்ளதாக தொழிற்துறை நிபுணர்கள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது